செ.வெ.எண் -01 நாள்:01.03.2018

## அரியலூர் மாவட்டத்தில் ரூ.15.10 இலட்சம் மதிப்பில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், பார்பனச்சேரி கிராமத்தில் கால்நடைப்பராமரிப்புத் துறையின் சார்பில் **கால் மற்றும் வாய்நோய் தடுப்பு திட்டம் 14-வது சுற்று தடுப்பூசி பணி மற்றும் தடுப்பூசி பணி அடையாள அட்டை வழங்கும்** நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (01.03.2018) துவக்கி வைத்தார்.

**இத்திட்டம் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உள்ள **1,65,437** பசுவினம் மற்றும் **2,913** எருமையினம் உள்ளிட்ட **1,68,350** கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திடும் பொருட்டு, கால் மற்றும் வாய்நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 14-வது சுற்று தடுப்பூசி பணி இம்மாவட்டத்தில் **01.03.2018 முதல் 21.03.2018 வரை** அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் ஆண்டிற்கு 2 சுற்றுக்கள் ஆக (மார்ச், செப்டம்பர்) வீதம் **20 சுற்றுக்கள்** மேற்கொள்ளப்படவுள்ளது. தற்பொழுது **14-வது சுற்று** தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக **1,69,000 டோஸ் தடுப்பு மருந்துகள் ரூ.15.10 இலட்சம்** மதிப்பீட்டில் (ரூ.8.93/டோஸ்) பெறப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பூசி பணிக்காக கால்நடை உதவி மருத்துவர்கள் கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் அடங்கிய **32 குழுக்கள்** அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர்கள், ஆவின் மற்றும் மகளிர் திட்டத்தினருடன் இணைந்து கால்நடைகளுக்கு **100 சதவீதம்** தடுப்பூசி பணி மேற்கொள்ளவதுடன், தடுப்பூசி பணி அடையாள அட்டை வழங்கி பதிவு செய்யப்படும். இதில் விடுபட்ட கால்நடைகள் ஏதும் இருப்பின் **22.03.2018 முதல் 31.03.2018 முடிய** அவற்றிற்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைப்பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.எம்.நஸீர், உதவி கால்நடை இயக்குநர் கரிகாலசோழன், கால்நடை உதவி கால்நடை மருத்துவர் அலுவலர்கள் செல்லபாண்டி, முருகேசன், கார்த்திக்கேயன், செந்தாமரை மற்றும் ஆவின் உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமாப்பு உதவியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.